## டெல்டா மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஆறுகள் – நீர்வழிகள் தூர் வாரப்படும்!

# பாசனத்திற்காக ஜீன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில் – கவன ஈர்ப்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, ஏப்.26-

பாசனத்துக்காக ஜீன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று சட்டப்பேரவையில் சிறப்பு கவனஈர்ப்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் விளக்கம் அளித்து பேசினார்.

சட்டப்பேரவையில் உறுப்பினர் இரா. காமராஜ்,

“டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர் வாரும் திட்டத்தின் மூலம், ஆறுகள் தூர்வாருதல் மற்றும் நீர்வழிகள் சரிபார்த்தல் போன்ற பணிகளை ஒவ்வோர் ஆண்டும் செய்து வருகிறோம். மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாகவே பணிகளை முடித்துத் தர வேண்டும்” என்று கவன ஈர்ப்பில் கோரிக்கை விடுத்து பேசினார். இதற்கு பதிலளித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:

உறுப்பினர் தஞ்சாவூரில் பேசுவதைப் போன்று பேசியிருக்கிறார். அது முறை தான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், கடந்த ஆண்டு மழை பெய்த போது, நீர்பிடிப்பு பகுதிகளெல்லாம், ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் வெள்ள நீர் சென்றதால், மண்திட்டுக்கள் ஏற்பட்டுள்ளது. இந்த மண் திட்டுக்களை அகற்றி, தண்ணீர் தங்கு தடையின்றி செல்வதற்கு வழி செய்யும் பொருட்டு, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் 5,021.74 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன அமைப்பு ஆதாரங்களை மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில் தூர்வார முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு சிறப்புத் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 882 பணிகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இப்பணிகளைத் திறம்பட செய்து முடிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்பார்வை அலுவலர்கள் நியிமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பணிகள் அனைத்தும் மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும். இந்த ஆண்டு ஜீன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



உறுப்பினர் இன்னொன்றை சொன்னார். கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை தூர்வாரும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டோம் என்பது குறித்த ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். தூர்வாரும் பணிகளே ஒரு காலத்தில் கிடையாது.

நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் அவர்கள் தான் தூர்வாரும் பணிகளை கொண்டு வந்தார். அப்போது எல்லோரும் பாராட்டினார்கள். அதனால், 2021-2022ல் 63 கோடி ரூபாய், 2022-2023ல் 78 கோடி ரூபாய், 2023-2024ல் 80 கோடி ரூபாய், 2024-25ல் 95 கோடி ரூபாய் என நிதியொதுக்கப்பட்டு ஆண்டுதோறும் அணையின் பாசனத்திற்கு திறந்து விடுவதற்காக எல்லா கால்வாய்களும் தூர்வாரப்படுகின்றன. அதன் விளைவாக, நான்கு ஆண்டுகளாக அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை வரை சென்றிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மேட்டூர் அணை திறக்கப்பட்ட விவரத்தை சொல்கிறேன். 2021-ம் ஆண்டில் ஜீன் 12-ஆம் தேதி, 2022-ஆம் ஆண்டில் தண்ணீர் இல்லாத காரணத்தால் முன்கூட்டியே மே மாதமே திறந்து விட்டோம். 2023-ஆம் ஆண்டில் ஜீன் 12-ஆம் தேதி, 2024-ஆம் ஆண்டில் பருவமழை காரணமாக 28-ஆம் தேதி அதை திறந்திருக்கிறோம்.

இன்னொன்றை நண்பர் சொன்னார், இந்த குடிமராமத்து இல்லையென்று சொன்னீர்கள். அது குடிமராமத்து உங்களுக்குத் தெரியும். RRR Work என்று ஒன்று கொண்டுவந்திருக்கிறோம். அந்த RRR-னுடைய Work என்னவென்றால், இந்த தூர்வாரும் பணிதான். தற்போது செய்திருக்கும் பணிகள் தான். இந்தத் திட்டத்தின்மூலம் அதில் விவசாயிகளும் பங்கு கொண்டிருக்கிறார்கள். சர்க்காரும் பங்கு கொண்டிருக்கிறது. இரண்டாவது, இலவசமாக மண் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று விவசாயிகளிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலமாகவும் தூர்வாரிக்கொண்டு போயிருக்கிறார்கள். RRR Workயிலும் செய்கிறோம். தமிழ்நாடு அரசு நிதியுதவியும் செய்கிறோம். விவசாயிகளையும் கலந்துகொள்ளச் செய்கிறோம். ஆகமொத்தம், கூட்டிப்பார்த்தால் அதுதான் மராமத்து வேலை.

விவசாயத்தைக் குறித்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமைகளை அவர் சொன்னார். Shutter களுக்கெல்லாம் பணம் ஒதுக்கவில்லை என்றார். என்னுடைய மானியக் கோரிக்கையில் மறுபடியும் எடுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று தெரியும். அவர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். இப்பிரச்சினை வெகுநாட்களாக இருக்கிறது. நாங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்தோம். நான்கு வருடங்களுக்கு முன்னால்தான் வந்தோம். அது எல்லா இடங்களிலும் வெகுநாட்களாக பழுதடைந்துள்ளது.

இரண்டாவது, shutterகளை மாற்றி விட்டு வந்தால், அடுத்து, அதை திருடர்கள் திருடிச் சென்றுவிடுகிறார்கள். ஏரிக்கரைகள், நீர்நிலைகள், மதகுகள் போன்ற இடங்களில் பொருத்தப்படுவதைத் திருடிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அதைக்கொண்டுபோய் விற்றால் காசு வருகிறது. எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அதையும் கழட்ட முடியாதபடி செய்வதற்கும் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, அவர் சொன்னது போன்று, அவர் சொன்ன இடங்களெல்லாம் நான் குறித்து வைத்திருக்கிறேன். ஏனென்றால், விவசாயத்தின் நலனுக்காக தெரிவித்திருக்கிறீர்கள். ஆகையால், நிதிநிலைமைக்கேற்ப அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உறுதிபட தெரிவித்தார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர்களுக்குப் பாராட்டு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

சென்னை, ஏப்.26-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத்தந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர்களுக்கு பாராட்டு விழா குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, சட்டப்போராட்டம் நடத்தியதன் விளைவாக வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாக்கள் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்திருந்தது சட்ட விரோதமானது.

அந்த சட்ட மசோதாக்கள் ஆளுநர் அவர்களின் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும், எனும் உச்சநீதிமன்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்ததன் காரணமாக 10 மசோதாக்கள் அமலுக்கு வந்தது, அவை:

1. தமிழ்நாடு பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
2. சென்னை பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
3. பெரியார் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
4. அண்ணா பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
5. தமிழ்நாடு மருத்துவ பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
6. தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
7. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
8. தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா,
9. தமிழ்நாடு தொழில் நுட்ப பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா,
10. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சட்டத்திருத்த மசோதா ஆகும்.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெறுவதற்கு வழக்காடிய தலைச்சிறந்த உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர்கள் முகுல் ரோஹத்கி, டாக்டர். அபிஷேக் சிங்வி, எம்.பி., ராகேஷ் திவேதி, பி.வில்சன், எம்.பி. ஆகியோருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பாராட்டு விழா 27.04.2025 மாலை 5 மணிக்கு சென்னை, கிண்டி, ஐ.டி.சி கிராண்ட் சோழாவில் நடைபெறுகிறது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், ஓய்வுபெற்ற நீதியரசர்கள், அறிஞர் பெருமக்கள், மூத்த வழக்கறிஞர்கள், பத்திரிக்கை மற்றும் ஊடக ஆசிரியர்கள், ஆன்றோர்கள் சான்றோர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அறிக்கையின் வாயிலாக தெரிவித்தார்.

---

## 1952 ஆம் ஆண்டு முதல் 2024–ஆம் ஆண்டு வரையிலான

# சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கல்!

## பேரவையில் – பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

**சென்னை,ஏப்.26-**

**சட்டப் பேரவையில், பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் 1952-ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்த அறிவிப்பு வருமாறு:**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமிக்க நமது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நிகழ்வுகள் குறித்த பதிவுகளைக் கணினிமயமாக்கம் செய்வது தொடர்பாக, சட்டமன்றப் பேரவையில்

13-8-2021 அன்று அளிக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கையில் 1921 ஆம் ஆண்டு முதல் சட்டமன்றப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது முதற்கட்டமாக, 1952 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, அதற்கென வடிவமைக்கப்பட்ட ‘tnlasdigital.tn.gov.in’ இணையதளத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று, 25-4-2025 பொது மக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1952 ஆம் ஆண்டு முதல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளிட்ட விவரங்களை தேடுதல் உள்ளிட்ட கூடுதல் வசதிகளுடன்கூடிய ‘tnlasdigital.tn.gov.in’ இணையதளத்தைப் பயன்படுத்தி சட்டமன்ற உறுப்பினர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் பழனிவேல் தியாக ராஜன்:** தற்போது நீங்கள் அறிவித்த இந்த website குறித்து பாராட்டுகிறேன். இதனுடைய முக்கியப் பயன் என்னவெனில், எந்த தேதி, எந்த உறுப்பினர், எந்தத் தலைப்பு என்று அதற்கென உள்ள தேடுதல் கலத்தில் பதிவிட்டால், அத்தனை விவரங்களும் வந்துவிடும். உதாரணமாக, உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், எந்தெந்த தேதிகளில் எந்தெந்த பொருள் பற்றி பேசியிருக்கிறார் என்பன உள்ளிட்ட அனைத்து விவரங்களும் ஆராய்ச்சி செய்யக்கூடிய அளவிற்கு வந்துவிடும் வகையில் இந்த website உருவாக்கப்பட்டிருக்கிறது; இந்த database உருவாக்கப்பட்டிருக்கிறது.

நான் நிதியமைச்சராக இருந்த போது தாக்கல் செய்த முதல் பட்ஜெட்டின்போது இது அறிவிக்கப்பட்டதாகும். 1921 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றம் என்று அமைக்கப்பட்டு, அதில் சட்ட மேலவை ஒரு அங்கமாக இருந்தது. இவற்றில், பிற மாநிலங்களும் இணைந்திருந்ததால் கூடுதலாக நிறைய தகவல்கள் இருக்கின்றன என்ற அடிப்படையில், இப்பணியை மேற்கொண்டிருக்கிறோம். சுதந்திரத்திற்குப் பிறகு நடைபெற்ற அனைத்து மேலவை மற்றும் சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைக் குறிப்புகள், நிகழ்வுகள் உள்ளிட்டவையெல்லாம் இருக்கின்றன. இது மிகவும் பயனளிக்கக்கூடிய வகையில் இருக்கும் என்று கருதுகிறேன். இதற்காக நான் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1921 ஆம் ஆண்டு முதல் 1952 வரையிலானவற்றையும் கூடிய விரைவில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏனெனில், அவற்றில் தான் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் உள்ளன. உதாரணமாக, அறநிலையத் துறையை உருவாக்கக் கொண்டுவரப்பட்ட மசோதா ஐந்து ஆண்டுகள் விவாதம் நடத்தப்பெற்று, நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க தகவல்களெல்லாம் அதில் இருக்கின்றன. இதுவரையிலும் மேற்கொண்ட பணிக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கமும் கொடுத்து, ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். 1921 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் 1952 வரையிலான பதிவேற்றம் செய்யப்படாதவற்றையும் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கின்றீர்கள். முதலமைச்சர் அவர்களுக்கு இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், நூறாண்டு காலம், அதாவது 1921 ஆம் ஆண்டிலிருந்து, 2021 ஆம் ஆண்டு முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 101-வது ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். நீங்கள் கூறியதுபோன்று, அப்போதே, 2021 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, இப்போது 1952 ஆம் முதல் 2024 வரையிலான சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டன. மீதமிருக்கின்ற 1921 முதல் 1952 வரையிலுள்ள நடவடிக்கைக் குறிப்புகளில் உள்ள தமிழ் எழுத்துக்களில் சில மாற்றங்கள் இருக்கின்றன. குறிப்பாக, லை, ளை போன்றவற்றில் சில மாற்றங்கள் இருக்கின்றன. ஆகவே, அவற்றை கணினியில் பதிவேற்றம் செய்யும்போது, 1952 ஆம் ஆண்டிற்கு பிறகு உள்ளவை ஒரு பகுதியாகவும், அதற்கு முன்னால் இருப்பதற்குத் தேவையான மாற்றங்கள் செய்து பதிவேற்றம் செய்வதற்கு சற்று காலதாமதம் ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்கள், மூன்று மாத காலத்திற்குள் அதையும் முடித்துக்கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

முழுமையாக 1921-லிருந்து இன்றுவரை சட்டமன்ற நடவடிக்கைகளை நீங்கள் சொன்னது போன்று யாருடைய பெயரை நீங்கள் குறிப்பிட்டு அடித்தாலும், அவர் என்ன பேசினார், எப்போது பேசினார், என்னென்ன தேவை என்பதையெல்லாம் உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் தெரிந்துகொள்கின்ற அளவிற்கு இந்தச் சிறந்த ஏற்பாட்டை செய்து தந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய பேரவை அலுவலர் பெருமக்கள் அனைவருக்கும் இந்தப் பேரவையின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் அறிவித்தார்.

---

## க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! நாத்திகம் நாகராசன் வரவேற்புரை– காஞ்சிபுரம் தெற்கு

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா!

### க.செல்வம் எம்.பி.–சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.– மேயர் மகாலட்சுமி யுவராஜ்–இறையன்பன் குத்தூஸ்–புதுவை சிவ. இளங்கோ சிறப்புரை!

காஞ்சிபுரம், ஏப்.26

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், கலை,இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்தும் “கவிஞர்கள் பார்வையில் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின்” எனும் நூல் வெளியீட்டு விழா, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 27.4.2025-ஞாயிற்றுக்கிழமை அன்று கலைஞர் பவள விழா மாளிகை காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விழாவிற்கு தலைமை ஏற்று கவிஞர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

சி.கே.வி. தமிழ்செல்வன், பி.எம்.குமார், பி.எம்.பாபு, க.குமணன், அ.யுவராஜ், எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், கலைச்செல்விஜெகநாதன், எம்.ஆர்.தனசேகரன், ஏ.சங்கர், வல்லரசு செங்குட் டுவன், ஜெ.முல்லைவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நுலை பெற்றுக் கொண்டு சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், இறையன்பன் குத்தூஸ், புதுவை சிவ. இளங்கோ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் ச.இனியரசு, டி.வீ.கோகுலகண்ணன், மலர்விழிகுமார், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், டி.ஆர்.நாராயணன், டாக்டர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், எழிலரசி சுந்தரமூர்த்தி, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ்.டி.பிரேம் சந்த், எஸ்.உசேன் , எஸ்.கே. ராஜேந்திரன், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், கு.குமார், கெ.ஞானசேகரன், டி.குமார், பி.சேகர், கே.கண்ணன், ஜி.தம்பு, பி.எச்.சத்திய சாய், பொன்.சிவக்குமார், கே.எஸ்.ராமசந்திரன், வி. ஏழுமலை, இ.சரவணன், ஏ.சிற்றரசு, எம்.எஸ்.பாபு, என்.எஸ்.பாரிவள்ளல், என். பாண்டியன், ஏ.சந்தரமூர்த்தி, வி. டி. ஆர். வி. எழிலரசன், டி.மோகன்தாஸ், கே.ஏ.செங்குட் டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், வி.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கே.சப்புராயன், டி..இராம்பிரசாத் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சு.முரளிதரன் நன்றி கூறுகிறார்.




IDRM–இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் சார்பில்.. சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி சென்னை. பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில்.. அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் IDRM செயற்குழு உறுப்பினர் மு.துரை பாண்டியன் தலைமையில் நடைபெற்ற “இளைஞர்களுக்கான கருத்தரங்கம் “ஜனநாயகமும் மொழி அரசியலும் என்னும் தலைப்பில் அரசியல் வரலாற்று ஆய்வாளர் பேராசிரியர் ஏ.கருணானந்தனும், “தமிழ் தமிழ்நாட்டின் திடீர் அரசியல் எனும் தலைப்பில் மேனாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களின் ஆலோசகர் டாக்டர்.பொன்ராஜ் வெள்ளைச்சாமி ஆகியோர் உரையாற்றினர். இக்கருத்தரங்கில் IDRM கருத்தியல் ஆலோசகர் ஜெ. குரு மூர்த்தி நன்றி கூறினார். இந்த கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். மேலும் இக்கருத்தரங்கில் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ் முரளி எஸ் ராஜசேகர், ப. ஶ்ரீராமுலு,ஜி எம் தேவன் ,இசட் ஆசாத், எம். விஜயகுமார்,என். பி.எம்.ஷேக்அப்துல்லா,ஆர்.கலைச்செல்வி இப்ராஹிம்கனி, பி விஜயகுமார்,எம் விநாயகம், பிரதீப் குமார், எல் சம்பத்குமார், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு/மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன்(எ) ராஜா, பரத்குமார், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.இராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

---

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

# பெரம்பூர் தெற்கு பகுதியில் வட்டங்கள் வாரியாக நீர்மோர் பந்தல்!

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கன்னிகை கோ.ஸ்டாலின் பங்கேற்பு!

### பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை, ஏப்.26-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கோடை வெயிலில் பொதுமக்களின் தாகத்தை தணிக்க சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர்தெற்கு பகுதியில்பகுதி கழகம் சார்பில் மற்றும் 36, 36(அ), 44(அ), 45, 45(அ), 46 ஆகிய வட்டங்களில் நாளை (27.04.2025 ஞாயிற்றுகிழமை) காலை 9.30 மணிக்கு கீழ்க்கண்ட இடங்களில் நீர் மோர் தண்ணீர் பந்தல் திறக்கப் பட உள்ளது.

1. தலைமை: 36(அ) வது வட்ட செயலாளர் க. பாபு. முன்னிலை: பகுதி செயலாளர் க.ஜெயராமன். இடம்:MKB நகர், மெயின் ரோடு, பேருந்து நிறுத்தம் (அருகில்) எதிரில் 36(அ)வதுவட்டம்

2. தலைமை: 36வது வட்ட செயலாளர் ARR.மலைச்சாமி MC., முன்னிலை: பகுதி செயலாளர் க.ஜெயராமன் இடம்: S.A. காலனி, 7வது தெரு 36வது வட்டம்

3. தலைமை: 44(அ)வது வட்ட பொறுப்பாளர் பெரம்பூர் S.அருள் முன்னிலை: பகுதி செயலாளர் க.ஜெயராமன் இடம்: வ.உ.சி தெரு, பெரியார் நகர் 44(அ) வதுவட்டம்

4. தலைமை:45வது வட்ட செயலாளர் G.மாரிமுத்து, முன்னிலை: பகுதி செயலாளர் க. ஜெயராமன் இடம்:B.V காலனி ரவுண்டானா 45வது வட்டம்

5. தலைமை: 45(அ) வட்ட செயலாளர் கேபிள் கி. தினகரன் , முன்னிலை: பகுதி செயலாளர் க . ஜெயராமன் இடம்:B.V.காலனி ரவுண்டானா 45(அ) வது வட்டம்

6. தலைமை: பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் . இடம்: மூர்த்திங்கர் தெரு, ஈஸ்வரன் கோவில் அருகில்

7. தலைமை: 46வது வட்ட செயலாளர் வி.முருகன், முன்னிலை: பகுதி செயலாளர் க. ஜெயராமன் இடம்:S.M நகர், பூங்கா அருகில் 46வது வட்டம்

இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழுஉறுப்பினர், மாநில நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள்,வட்ட கழக செயலாளர்கள்,பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் தெரிவித்துள்ளார்.



அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.04.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், அரசுப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் 16 வயது மாணவி அஸ்வினிக்கு ரோபோடிக் மூலம் அறுவை சிகிச்சை செய்து குணமடைந்துள்ளார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து, சிகிச்சை அளித்த மருத்துவக்குழுவினரை பாராட்டினார்கள். இந்நிகழ்வில் மயக்கவியல் துறை பேராசிரியர் மரு.குமார், இருதயவியல் துறை பேராசிரியர் மரு.மீனாட்சி சுந்தரம், நோடல் அலுவலர் மரு.ஆனந்தகுமார் மற்றும் மருத்துவக் குழுவினர் உடனிருந்தனர்.